FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS) (பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.) (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

8074707

C

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year ஆண்டு 2026 | FIR No. மு.த.அ. எண் 17/2026 | Date நாள் 13.11.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12.11.2026 | Date to : நாள் வரை 12.11.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 07.40 hrs | Time to : நேரம் வரை 16.40 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2026 | Time : நேரம் 10.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.11.2026 | Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 25 Kms / West

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சிவகாசி டாஸ்மாக் கடை எண்-12076

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மு.மணி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.முத்தையா

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.02.1976 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விற்பனையாளர் டாஸ்மாக் கடை | (g) Address : முகவரி 4/60, காளியம்மன் கோவில் தெரு, மகாராஜபுரம், வத்ராப் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.அமல்ராஜ், மேற்பார்வையாளர், சிவகாசி டாஸ்மாக் கடை எண்.12076

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/11/26

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M.RAMACHANDRAN

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..... DSP/VAC/VNR.
Rank: நிலை ..... No. எண் .....

விருதுநகர் மாவட்ட ஊ.தக.பிரிவு குற்ற எண்.17/2026 பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

நான் இன்று 13.11.2026 காலை 09.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், வத்ராப் தாலுகா, மகாராஜபுரம், கதவு எண்.4/60, காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த திரு.முத்தையா என்பவரின் மகன் திரு.மு.மணி என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 13.11.2026 காலை 10.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திரு.அமல்ராஜ், மேற்பார்வையாளர், சிவகாசி டாஸ்மாக் கடை எண்.12076 என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2026 சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-ன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.மு.மணி அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் மு.மணி வயது 50/2026, த/பெ.முத்தையா, 4/60, காளியம்மன் கோவில் தெரு, மகாராஜபுரம், வத்ராப் தாலுகா, விருதுநகர் மாவட்டம். விற்பனையாளர், டாஸ்மாக் கடை எண்-12076 சிவகாசி. கூடுதல் பொறுப்பு டாஸ்மாக் கடை எண்-12022 மகாராஜபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, விருதுநகர். பொருள்: லஞ்சம் கேட்பது குறித்து புகார். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம். வத்ராப் தாலுகா, மகாராஜபுரம், காளியம்மன் கோவில் தெரு, கதவு எண்.4/60, என்கிற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் 29.11.2003 அன்று டாஸ்மாக் கடையில் தினக்கூலி அடிப்படையில் விற்பனையாளராக பணிக்கு சேர்ந்தேன். அவ்வபோது எங்களுக்கு பணிமாறுதலுக்கேற்ப டாஸ்மாக் கடைகளுக்கு விற்பனையாளராக பணி செய்வேன். அவ்வாறு நான் சாத்தூர் தாலுகா பெரிய கொல்லப்பட்டி டாஸ்மாக் கடை எண்-120121 இல் விற்பனையாளராக பணிபுரிந்தபோது அரசால் அறிவிக்கப்பட்ட அரசு டாஸ்மாக் கடைகளை குறைக்கும் நடவடிக்கையின் கீழ் மேற்படி பெரிய கொல்லப்பட்டி டாஸ்மாக் கடை எண்-120121மூடப்பட்டதால் எனக்கு சிவகாசி டாஸ்மாக் கடை எண்-12076இல் 15.06.2026 அன்று பணி ஒதுக்கப்பட்டு அதன்பின் விற்பனையாளராக அங்கு பணி செய்துவந்தேன். எனக்கு கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு வாகன விபத்தாகி எனது வலது கை மற்றும் வலது கால் செயல் இழந்து விட்டது. நான் மகாராஜபுரத்தில் இருந்து சிவகாசிக்கு பேருந்து மூலம் வந்து செல்வது மிகவும் மன உழைச்சலாக இருந்தது. எனவே எனது உடல்நிலை மற்றும் மருத்துவ காரணங்கள் கருதி எனக்கு மாவட்ட மேலாளர் அவர்களால்

மகாராஜபுரம் டாஸ்மாக் கடை எண்-12022 இல் கூடுதல் பொறுப்பு பணி ஒதுக்கப்பட்டு 27.10.2026 அன்று முதல் மகாராஜபுரம் டாஸ்மாக் கடை எண்-12022 இல் கூடுதல் பொறுப்பாக விற்பனையாளர் பணி செய்து வந்தேன். எனது வருகை பதிவு தாய் கடையான டாஸ்மாக் கடை எண்-12076 இல் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சிவகாசி டாஸ்மாக் கடை எண்-12076 இல் மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.அமல்ராஜ் அவர்கள் நேற்று (12.11.2026) சுமார் காலை 07.40 மணியளவில் அவரது 9488728989 கைபேசியிலிருந்து என்னுடைய 9943959770 கைபேசி எண்ணிற்கு ஒரு மிஸ்டுகால் கொடுத்தார். எனவே, நான் அவரை தொடர்பு கொண்ட போது என்னிடம் என்ன மணி உன்னுடைய வருகை பதிவினை நான் தான் மாவட்ட மேலாளருக்கு அனுப்பனும் அப்பதான் உனக்கு சம்பளம் கிடைக்கும் கடந்த மாதம் உன்னுடைய வருகை பதிவினை அனுப்பி சம்பளம் பெற்றுக் கொடுத்துவிட்டேன். இந்த மாதம் உனக்கு சம்பளம் கிடைக்க உன்னுடைய வருகை பதிவினை அனுப்ப எனக்கு தனியாக ரூ.6,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார், நானே கை கால் வராம கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறேன். மாதாமாதம் மருந்து வாங்க கூட பணம் இல்லாம இருக்கிறேன். என்னிடம்போய் பணம் கேட்டா எப்படி சார் என்று சொன்னேன். அதற்கு அவர், எனக்கு அதலாம் தெரியாது நான் கேட்டபடி எனக்கு நீ ரூ.6,000/- பணமாக கொண்டுவந்து கொடுத்துவிடு அப்பதான் உனக்கு வரும் மாதம் சம்பளம் கிடைக்க வருகைபதிவினை மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைப்பேன் அப்படி நீ ரூ.6,000/- பணம் கொண்டு வந்து கொடுக்கவில்லை என்றால் உனக்கு சம்பளம் கிடைப்பது சிரமம்தான் என்று சொன்னார். பின்னர் நேற்று (12.11.2026) சுமார் மாலை 04.40 மணியளவில் அவரது 9488728989 கைபேசி எண்ணிற்கு என்னுடைய 9943959770 கைபேசி எண் மூலம் தொடர்பு கொண்டு என்னுடைய வறுமையை கூறி அவர் கேட்ட பணம் 6,000/- ரூபாயை, கொடுக்க இயலாமையை தெரிவித்தேன். அப்போது அவர் அதெலாம் முடியாது, நான் கேட்டபடி பணம் ரூ.6,000/-ஐ எப்படியாவது ரெடி பண்ணி கொண்டுவந்து கொடுத்துவிடு என்று கறாராக கூறிவிட்டார். வேறு வழியில்லாமல் நான் சரியென்று சொல்லிவிட்டேன். எனக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, எனக்கு சம்பளம் கிடைக்க வருகை பதிவினை மாவட்ட மேலாளருக்கு அனுப்ப என்னிடம் லஞ்சப்பணம் ரூ.6,000/- கேட்ட சிவகாசி டாஸ்மாக் கடை எண்-12076 இல் மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு.அமல்ராஜ் என்பவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு,(sd) M.மணி 13.11.26 Sir, Received the complaint on 13.11.2026 at 09.30 hrs, The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the

registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No 17/2026 u/s 7 of the P C Act 1988 as amended in 2018 on 13.11.2026 at 10.00 hrs and took up for investigation. (Sd) (M.Ramachandran) 13/11/26 DSP/V&AC/VNR. The original FIR along with this original complaint is submitted to the Hon'ble PDJ/ Special Judge for P.C. Act case, Virudhunagar District at Srivilliputhur and the copies submitted to the concerned officers

13/11/26

(M. RAMACHANDRAN).

DSP/V&AC/VNR.